**உழவர்கரை நகராட்சி**
**புதுச்சேரி-5**

கோ.எண்:42-46/உ.ந./வருவாய்/2025 ஜவகர் நகர், தேதி 24/1/25

# மின்னனு ஏல அறிவிப்பு

புதுச்சேரி, உழவர்கரை நகராட்சிக்கு சொந்தமான நவீன சுகாதார மீன் அங்காடி மற்றும் அஜீஸ் நகர் அங்காடி வளாகங்கள் தவிர்த்து மற்ற அங்காடி வளாகங்கள் மற்றும் உழவர்கரை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர கடைகளில் **ஓராண்டு காலம் அதாவது 01.03.2025 முதல் 28.02.2026 வரையிலான காலத்திற்கு** அடிக்காசு கட்டணம் வசூல் செய்வதற்கான உரிமம் பெற கீழ்காணும் விபரங்கள் மற்றும் நிபந்தனைகளின் படி மின்னனு ஏலம் வாயிலாக நடத்தப்பட உள்ளது.

ஏலத் தேதி மற்றும் நேரம்: **17.02.2025, திங்கள்கிழமை, மாலை 03.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.**

| **நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஓராண்டிற்கான ஏலத்தொகை** ரூ. | **பிணை வைப்பு தொகை** ரூ. |
|---|---|
| 14,27,800/- | 1,42,780/- |

## ஏல நிபந்தனைகள்

1. ஏலம் எடுப்பவர் தனிநபராக இருத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கூட்டு சேர்ந்து ஏலம் எடுக்கக்கூடாது.

2. ஏலம் எடுக்க விரும்பும் ஏலதாரர், மின்னனு ஏலத்தில் பங்கேற்க சரியான டிஜிட்டல் விசையை (Digital Key) வைத்திருக்க வேண்டும். மேலும், ஏலப்படிவம் புதுச்சேரி, ஜவகர் நகரில் உள்ள உழவர்கரை நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் காசாளரிடம் ரூபாய் 500/- மற்றும் 5% சரக்கு மற்றும் சேவைவரி (GST) செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது உழவர்கரை வலைதளமான www.oulmun.in–ல் இருந்து பதிவிறக்கம்செய்து https://eauction.gov.in என்ற வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யவேண்டும். மேலும் அதனுடைய நகலை உழவர்கரை நகராட்சி அலுவலகத்தில் சமர்பிக்கலாம். பதிவிறக்கம் செய்த ஏலப்படிவம் சமர்ப்பிக்கும் போது ரூபாய் 500/- மற்றும் 5% GST சேர்த்து "The Commissioner, Oulgaret Municipality, Puducherry" என்ற பெயரில் வரைவோலையை (Demand Draft) ஏலப்படிவத்துடன் கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஏலம் கேட்க விரும்புவோர் பூர்த்திசெய்து கையொப்பமிட்ட ஏலப்படிவம் மற்றும் அதற்குண்டான பிணை வைப்புத் தொகை ரூ.1,42,780/- க்கு ஆணையர், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி (The Commissioner, Oulgaret Municipality, Puducherry) என்ற பெயரில் ஏதேனும் ஒரு அரசு அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் வரைவோலை (Demand Draft) கண்டிப்பாக ஏலப்படிவத்துடன் இணைத்து சமர்பித்தல் வேண்டும்.

4. ஏலப்படிவம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் **14.02.2025 வெள்ளிக்கிழமை, மாலை 4.00** மணி வரை ஆகும். பூர்த்தி செய்யப்பட்ட ஏலப்படிவங்கள் அரக்கு முத்திரை சீல் இடப்பட்ட உறையினில் "**ஆணையர்,உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி**" (The Commissioner, Oulgaret Municipality, Puducherry) என்று குறிப்பிட்டு ஜவஹர் நகரில் உள்ள ஆணையர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். உறையின் மேல் "**அடிக்காசு ஏல விண்ணப்பப் படிவம்**" என்று குறிப்பிட வேண்டும்.

5. ஏலத்தில் பங்கேற்போர் உழவர்கரை நகராட்சியின் வரி பாக்கியில்லா சான்றிதழ் பெற்று அதனை ஏலப்படிவத்துடன் இணைக்கப்படவேண்டும்

6. உழவர்கரை நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஏலத்தொகையை விட அதிகமாக ஏலத்தொகை குறிப்பிட வேண்டும், குறைந்த பட்சம் ஏலத்தொகை ரூ.1,000/- வித்தியாசத்தில் ஏற்றம் பெறவேண்டும்.

7. ஏலத்தில் அதிகபட்ச ஏலத்தொகை கேட்பவர் வெற்றி பெற்ற ஏலதாரர் ஆவார். ஏலம் எடுத்தவர் ஏலத் தொகையை இரண்டு தவணையாக செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. அதில் முதல் தவணை ஏலத்தொகையை அதேநாளில் காசோலையாகவோ அல்லது ரொக்கமாகவோ செலுத்துதல் வேண்டும். தவறினால் அவர் செலுத்திய பிணை வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் இரண்டாவது அதிகபட்ச ஏலதாரருக்கு ஏலத்தொகை அனுமதிக்கப்பட்டு உரிமம் வழங்கப்படும். இரண்டாவது தவணை அடுத்த மூன்று மாதங்களுக்குள் செலுத்தவேண்டும்.

8. ஏல தொகையை செலுத்திய தேதிலிருந்து ஆறு மாத காலத்திற்கு அடிக்காசு கட்டணம் வசூலிப்பதற்கு உரிமம் வழங்கப்படும் மற்றும் இரண்டாம் தவணை ஏலத்தொகை செலுத்திய பிறகு மீதம் உள்ள ஆறு மாத காலத்திற்கு அடிக்காசு கட்டணம் வசூலிப்பதற்கு உரிமம் வழங்கப்படும்.

9. ஏலத்தில் வெற்றி பெற்ற ஏலதாரர் சாலை ஓரங்களில் பொருட்களை வைத்து விற்பனை செய்பவர்களிடம் அடிகாசு வசூலிக்கும் பொருட்டு ஒரு சதுர மீட்டர் அல்லது அதற்கு குறைவான இடத்திற்கு நாள் ஒன்றிற்கு தலா ரூபாய். 10/- வீதம் வசூலிக்கப்படவேண்டும். மேலும் ஏலதாரர் **TATA ACE** போன்ற 'வண்டியில் பொருட்களை வைத்து விற்பனை செய்பவர்களிடம் அடிகாசிற்கு பதில் அபராதம் விதிக்க உள்ளதால் அதற்கு நகராட்சி தனியாக அபராத தொகை நிர்ணயம் செய்த பிறகு நகராட்சியின் பங்கு உட்பட விபரங்கள் தெரிவிக்கப்படும்.

10. ஏலம் எடுத்தவர் கீழ்குத்தகைக்கு விடக்கூடாது மற்றும் ரசீது புத்தகத்தில் உழவர்கரை நகராட்சியால் முத்திரையிட்ட ரசீது மட்டுமே கொடுக்கவேண்டும்.

11. ஏலம் தொடர்பான இதர நிபந்தனைகளை உழவர்கரை நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வருவாய் அதிகாரியை நேரில் சந்தித்து தெரிந்துகொள்ளலாம்.

12. ஏலத்தை தள்ளி வைப்பதற்கும் (அ) நிறுத்தி வைப்பதற்கு மற்றும் ரத்து செய்வதற்கும் நகராட்சி ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

**(ஆ. சுரேஷ்ராஜ்)**
**ஆணையர்**